

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 26.08.2025 அன்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு எண் 28க்குட்பட்ட அண்ணா நகர் பகுதியில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் அமைக்கப்பட்டு வரும் விளையாட்டு மையத்தின் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாகவும் தரமாகவும் மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், நகரப் பொறியாளர் சிவபாதம், நிர்வாகப் பொறியாளர் பாலசுப்ரமணியன், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### பா.ஜ.க. முன்னாள் தலைவர் தொடர்ந்த அவதூறு வழக்கு!

## கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு, எம்.பி. - நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆதாரங்களை வழங்கினார்!

சென்னை, ஆக. 30 –

பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை மீது தொடரப்பட்ட அவதூறு வழக்கில், திமுக பொருளாளர் டி.ஆர். பாலு நீதிமன்றத்தில் ஆஜராகி தனது தரப்பிலான ஆதாரங்களை வழங்கினார்.



பா.ஜ.க. முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை DMK files என்ற பெயரில் தி.மு.க. மீதும், தம் மீதும் பொய்யான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறி, அண்ணாமலை மீது நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. பொருளாளருமான டி.ஆர்.பாலு சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் அவதூறு வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இதுகுறித்து, அவர் தொடர்ந்த வழக்கில், உரிய ஆதாரங்கள் இன்றி தனது பெயருக்கு தீங்கிழைக்கும் நோக்கில், அண்ணாமலை அவதூறு கருத்துக்களைப் பரப்பி வருவதாகக் கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த ஜூலை 17ம் தேதி வழக்கு விசாரணைக்காக அண்ணாமலை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் ஆஜரானார். ஆனால், டி.ஆர்.பாலு ஆஜராகவில்லை. எனவே, இந்த வழக்கின் அடுத்தக்கட்ட விசாரணை ஆகஸ்ட் 28 ஆம் தேதி நடைபெறும் நீதிபதி வழக்கை ஒத்தி வைத்தார்.

இந்த வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் நீதிமன்றத்திற்கு வந்தது. அப்போது டி.ஆர்.பாலு, நேரில் ஆஜராகி தனது தரப்பில் உள்ள ஆதாரங்களை வழங்கினார்.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி, ஒன்றரை மணி நேரம் விளக்கம் அளித்ததாகவும், வழக்கின் அடுத்த விசாரணை செப்டம்பர் 22ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!

சேலம், ஆக. 30-

சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம். செல்வகணபதி எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகின்ற 02.09.2025 செவ்வாய்கிழமை அன்று காலை 10.00 மணி அளவில், எடப்பாடி, நைனாம்பட்டியில் உள்ள நடராஜன் மஹால் திருமண மண்டபத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி தலைமையில், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பி.எஸ். சீனிவாசன் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர்க் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்த்தல் குறித்து, கலைஞர் நூலகம் அமைத்தல் குறித்து, கிளை, வார்டு இளைஞர் அணி நிர்வாகிகள் நியமனம் குறித்து, பாக அமைப்பாளர்களுக்கான சமூக வலைதள பயிற்சி, சமூக வலைதள செயல்பாடுகள் குறித்து, கழக ஆக்கப் பணிகள்

சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

## தினை வகைகள் மூலம் பேக்கரிப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி!

சென்னை, ஆக. 30 -

தமிழ்நாடு அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், 3 நாட்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் தினை வகைகள் கொண்டு பேக்கரி பொருட்கள் தயாரித்தல் பயிற்சி வரும் 9.9.2025 முதல் 11.9.2025 தேதி வரை காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் பேக்கரி பொருட்களின் கோதுமை வெண்ணெய் பிஸ்கட், தினை பால் பிஸ்கட், தினை ஜீரா குக்கீ, செரிமான குக்கீகள், ராகி நட்ஸ் குக்கீகள், மல்டிமில்லட் குக்கீகள், சோளம் சாக்லேட் பிஸ்கட், கம்பு நெய் பிஸ்கட், கருப்பு கவுனி பாதாம் குக்கீ, தினை ஓமம் பிரவுன் குக்கீ, பிரவுன் ஓமம் பிரவுன் குக்கீ, ராகி, சாமாமில் பிரவுன் குக்கீ ஃபட்ஜி பிரவுனி, கருப்பு கவுனி பிரவுனி, டபுள் சாக்லேட் பிரவுனி, கோதுமை வெண்ணிலா பஞ்சு, ராகி சாக்லேட் கேக், தினை வாழை கேக், சோளம் கேரட் இலவங்கப்பட்டை கேக், முழு கோதுமை ரொட்டி, ராகி தினை ரொட்டி, மல்டிமில்லட் ரொட்டி, பால் ரொட்டி வகைகள் எப்படி தயாரிப்பது பற்றி இப்பயிற்சியில் விளக்குவார்கள். மேலும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விளக்கப்படும்.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் (ஆண்/பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி 10வது வகுப்புடன் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியில் பங்குபெறும் பயனாளிகளுக்கு குறைந்த வாடகையில் தங்கும் விடுதி உள்ளது தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் WWW.EDITN.IN என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 032. 8668102600 / 7010143022. முன்பதிவு அவசியம்: அரசு சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜ் அறிக்கை!

நீலகிரி, ஆக.30–

நீலகிரி மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் கே.எம்.ராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் 1.9.2025 திங்கட்கிழமை காலை 11 மணி அளவில் மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.போஜன் அவர்கள் தலைமையில், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கழக தேர்தல் பணி செயலாளர், அரசு தலைமைக் கொறடா கா.ராமசந்திரன் ஆகியோர் முன்னிலையில் மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழகச் செயற்குழு –பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்.



செப்டம்பர் – 15, கழக முப்பெரும் விழா நிகழ்ச்சிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### திருமதி. துர்கா ஸ்டாலின் எழுதிய

## ‘அவரும் நானும்’ நூல் - பெங்களூரில் அறிமுக விழா!

பெங்களூர், ஆக.30 –

தி.மு.க. தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் துணைவியார் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் எழுதிய ‘அவரும் நானும்’ என்ற நூலில் இரண்டாம் பாகம் அறிமுக விழா கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி சார்பில் நடைபெறுகிறது.

செப்டம்பர் மாதம் 21-ஆம் தேதி காலை 10 மணியளவில் பெங்களூர் குயின்ஸ் ரோட்டில் உள்ள அக்ரிகல்சர் வேளாண் கழக அரங்கத்தில் இந்த விழா நடைபெற உள்ளது.

டாக்டர் ஜெயராஜ முரளி அறிமுக உரை ஆற்றுகிறார். தலைமைக் கழக இலக்கிய அணி தலைவர் அன்வர் ராஜா, தலைமை கழக இலக்கிய அணி செயலாளர் வி.பி. கலைராஜன், தலைமைக் கழக இலக்கிய அணி பொருளாளர் சந்திர பாபு, தலைமை கழக இலக்கிய அணி முன்னாள் தலைவர் - மறைந்த புலவர் இந்திர குமாரியின் மகள் லேகா இந்திரகுமாரி, செங்கை சண்முகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

முதல் 10 சிறப்பு புத்தகங்களை க.முருகன், மதுசூதன பாபு, கார்த்திகேயன், ஹரிஹரன் பெற்றுக் கொள்கின்றனர். இந்த விழாவிற்கு கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி தலைவர் போர் முரசு கதிரவன் தலைமை தாங்குகிறார். கர்நாடக மாநில தி.மு.க. அமைப்பாளர் ந.ராமசாமி முன்னிலை வகிக்கிறார்.

கர்நாடக மாநில தமிழ் பத்திரிகையாளர்கள் சங்க தலைவர் முத்துமணி நன்னன் வரவேற்புரை ஆற்றுகிறார். பெங்களூர் பாவலர் ப.மூர்த்தி நன்றி உரை ஆற்றுகிறார்.

இந்த விழாவில் கழக உடன்பிறப்புகள், நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## கரூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

கரூர், ஆக. 30-

கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கரூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (30.08.2025 - சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு கரூர் மாவட்ட கழக அலுவலகம் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும், கழக உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம் எம்.எல்.ஏ., அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ எம்.எல்.ஏ. கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி எம்.எல்.ஏ., கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணை செயலாளர் வே.பல்லவி ராஜா, கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயகுமார் ஆகி யோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. 17.09.2025 அன்று கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழா

2. கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில்பாலாஜி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஜி.எஸ்.டி. வரி மாற்றப் பாதிப்புகள் குறித்து! புதுடெல்லியில்

## எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில நிதியமைச்சர்கள் முக்கிய ஆலோசனை!

டெல்லி, ஆக. 30-

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் நிதி அமைச்சர்களின் கூட்டம் டெல்லியில் தொடங்கியது. கர்நாடக மாநில அரசு இல்லத்தில் நடைபெற்று வரும் கூட்டத்தில் தமிழ்நாடு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, கர்நாடக அமைச்சர் கிருஷ்ணா பைரே கவுடா மற்றும் கேரளா, தெலுங்கானா, பஞ்சாப், இமாச்சல், ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களின் நிதியமைச்சர்களும் கலந்து கொண்டுள்ளனர். மாநிலங்களுக்கு உரிய ஜி.எஸ்.டி. இழப்பீட்டை வழங்குதல், அமெரிக்கா வரி விதிப்பு மூலம் ஏற்பட்டுள்ள தொழில் பாதிப்பு பிரச்சனைகளுக்கு ஒன்றிய அரசு தீர்வு காண்பது உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.டி. வரி குறைப்பால் ஏற்படும் லாபம் பெருநிறுவனங்களுக்கு மட்டுமே சென்று சேராமல் மக்களுக்கு பயனளிக்கும் வகையில் இருக்க வேண்டும் என்றும் விவாதிக்கப்பட்டு வரு கிறது. அடுத்தவாரம் நடைபெறும் ஜி.எஸ்.டி. கூட்டத்தில் எழுப்பிய வேண்டிய முக்கிய பிரச்சினைகள் குறித்தும் ஆலோசித்து வருகின்றனர்.




அன்பில் அறக்கட்டளை நடத்தும் அன்பில் 26 மாணவர் வழிகாட்டல் விருதுகள் வழங்கும் விழா திருவெறும்பூர் மான்ட்ஃபோர்ட் பள்ளி வளாகத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முன்னிலை மண்டல குழுத் தலைவர் மு.மதிவாணன், பள்ளிக் கல்வித்துறை இணை இயக்குநர் வை.குமார், திருச்சி முதன்மைக் கல்வி அலுவலர், கோ.கிருஷ்ணப்பிரியா, முதல்வர் மான்போர்ட் பள்ளி அருட்சகோதரர் எ.ராபர்ட் லூர்துசாமி, மாணவ – மாணவிகளுக்கு தன்னம்பிக்கையை வழங்கும் விதமாக சிறப்பு சொற்பொழிவாளர்கள் உரையாற்றினர் . வையத் தலைமை கொள் ஆசிரியர் மனசு திட்ட ஒருங்கிணைப்பாளர் சிகரம் சதிஷ்குமார், மெய்ப் பொருள் காண்பதறிவு மதுரை, வி.ராமகிருஷ்ணன் தன்னம்பிக்கை பேச்சாளர்கள் உரையாற்றினர்.



விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொருளாளர் இரா.ஜனகராஜ் தந்தை ராஜாமணி அவர்களின் மறைவிற்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அவரை பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாநில காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவர் குலாம் மொய்தீன், நகர கழக பொறுப்பாளர் எஸ்.வெற்றிவேல் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.